# இன்று திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு

*திருவழிப்பாட்டு ஆண்டு* B (29-03-2015)

### *திருப்பலி முன்னுரை - 1*

இயேசுவின் பெயருக்கு விண்ணவர், மண்ணவர், கீழுலகோர் அனைவரும் மண்டியிடுவர்: தந்தையாம் கடவுளின் மாட்சிக்காக் இயேசு கிறிஸ்து ஆண்டவர் என எல்லா நாவுமே அறிக்கையிடும். அன்புமிக்க சகோதர சகோதரிகளே! இயேசுவே ஆண்டவர் என்னும் இனிய நாமத்தில் நல் வாழ்த்துக்கள். இன்று திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு. இயேசுவின் பிரசன்னத்தில் விசுவாசத்தோடும், வேண்டுதல்களோடும் ஒன்று கூடியுள்ள நாம் புனித வாரத்திற்குள் நுழைகின்றோம்.

எருசலேம் நகரை நோக்கிய இயேசுவின் பயணம் அவரது எளிமையை, இறைத் தந்தையின் மீட்பின் திட்டத்திற்கு தன்னையே வெறுமையாக்கும் அவரது மனத் தாழ்ச்சியை வெளிப்படுத்துகின்றது.

யூத மக்கள் திரள் மரக்கிளைகளை ஏந்தி, இயேசுவை ஆரவாரமாக வாழ்த்துக்கள் பேரொலியுடன் வரவேற்ற போதும் வெகுவிரைவிலேயே அவர்களின் ஆரவாரம் அர்த்தமற்றதாகிப் போனது: அவரைச் சிலுவையில் அறையும் என்று எதிர் அலையாக மாறியது. இவை அனைத்திற்கும் மத்தியில், எல்லாம் இறைத் தந்தையின் திருவுளத்தின் படியே நடைபெறட்டும் என்று உலக மீட்புக்காக தன்னையே இழந்திட தயாராக இருந்தார் இயேசு கிறிஸ்து.

நமக்கும் இயேசுவின் மன நிலைமை வேண்டும். மக்கள் நம்மைப்போற்றினாலும், தூற்றினாலும் இறைத் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவது மட்டுமே நம் இலட்சியமாக இருந்திட இயேசுவுடன் இணைவோம். இப்புனித வாரத்தில் அவரது பாடுகளுடன் நம் துன்பங்களும், சவால்களும் மீட்பின் ஆற்றலாய் மாறிட இறைத் தந்தையிடம் வரம் கேட்ட புனித வார திரு வழிபாடுகளில் பங்கேற்போம்.

# விசுவாசிகள் மன்றாட்டுகள்:

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைத் தயவாய் கேட்டருளும்.

**எந்நாளும் எங்களை வழிநடத்தும் அன்பு தெய்வமே!**

திருச்சபையை வழிநடத்தும் எங்கள் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள் மற்றும் துறவறத்தார் அனைவரையும் ஆசீர்வதியும், அவர்கள் ஆற்றும் பணி வாழ்வில் சந்திக்கும் துன்ப துயரங்கள் மற்றும் இடையூறுகள் போன்றவைகளில் உடன் இருந்து அவர்களை காத்து வழிநடத்தியருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**துன்பமில்லாமல் இன்பம் இல்லை சிலுவையில்லாமல் சிம்மாசனம் இல்லை என்பதை உணர்த்திய எம் இயேசுவே!**

எங்களுக்கு வரும் துன்பத் துயரங்களை தாங்கிக்கொள்ளவும், பிறர் வாழ்வில் உள்ள சுமைகளை பகிர்ந்து, கொண்டு அவர்களுக்கு உதவி செய்யும் நல் மனதைத் தந்தருள இறைவா உம்மை வேண்டுகிறோம்.

**அன்புத் தந்தையே இறைவா!**

நீர் எமக்குக் கொடுத்துள்ள மக்கள் செல்வங்களுக்காக உமக்கு நன்றி கூறுகின்றோம். அவர்கள் இதுவே தகுந்த காலம், இன்றே மீட்பின் நாள் என்னும் இறைவெளிப்பாட்டை தம் உள்ளத்தில் ஆழமாகப் பதித்து: இக்காலத்தை உம்மையே தேடி நேசிப்பதிலும், உமது வார்த்தைக்கு ஆர்வத்துடன் செவிமடுத்து வாழுவதிலும் தங்கள் கவனத்தைச் செலுத்தவும் உமக்குகந்த பிள்ளைகளாக வாழவும், செயற்படவும் அவர்களை ஆசீர்வதித்து வழிப்படுத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**விடுதலையின் தெய்வமே இறைவா!**

புனித வாரத்தில் நுழைகின்ற நாங்கள், உமது பாடுகளையும், இறப்பையும் சிந்தித்த எங்கள் வாழ்க்கையில் மாற்றம் கண்டு, எங்களுடைய பாவ வாழ்வைக் களையவும், உமது அருளின் துணையால் புதிய சமுதாயத்தை உருவாக்கி உமக்கேற்றவர்களாய் வாழவும் வேண்டிய வரம் அருள இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**ஆறுதல் அனைத்திற்கும் ஊற்றாகிய இறைவா!**

ஆதரவற்றோர், கைவிடப்பட்டோர், நோயுற்றோர் மற்றும் வறுமையில் வாடுவோர் அனைவரும் உமது பாதுகாப்பையும், பராமரிப்பையும் பெற்று மகிழ்ந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**இரக்கம் காட்டுபவரே இறைவா,**

எம்மை குணப்படுத்துவதற்காக காயப்பட்ட இயேசுவின் பாடுகள் வழியாக, எங்கள் உடல், உள்ள, ஆன்ம நோய்களை குணப்படுத்தி புது வாழ்வருள வேண்டுமென்றும், சிலுவையில் தம்மையே பலியாக்கிய கிறிஸ்து இயேசுவில் உமது திட்டத்தின் நிறை வினைக் கண்டுணர, உலக மக்கள் அனைவருக்கும் ஞானமருள வேண்டுமென்றும் இறைவா உம்மை மன்றாடுகிறோம்.